RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1857

OPEN ACCESS

# தமிழ் நாவல்களில் காணலாகும் பெண்ணியப் பாகுபாடுகள்

ந. புனிதலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஏ.டி.எம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), நாகப்பட்டினம்-611001, தமிழ்நாடு, இந்தியா.

# Feminist Discriminations in Tamil Novels

**N. Punithalakshmi** [a, *]

[a] Department of Tamil, A.D.M College for Women (Autonomous), Nagapattinam-611001, Tamil Nadu, India

* Corresponding Author: punithapasupathi@gmail.com

Received: 01-08-2022
Revised: 05-10-2022
Accepted: 23-10-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

A woman is important to lead a happy familial life and in creating society. She is important in three dimensions as a child to a father, as a wife to a man, and as a mother to children. Thus, by enslaving such women, their development was stunted. Women are trapped in multi-pronged attacks like infanticide, dowry and work load. Feminism came into being when the women started thinking about their progress and freedom. The feminist movement was initially a movement that advocated women's rights. Then thoughts about feminism arose in various fields. The world encyclopedia says that feminism means that women should have equality, economic power and political power as equal to men. Women suffer more because men create some discrimination in the society. Discrimination in birth, discrimination in education, discrimination in married life, discrimination in death, etc. This article shows that because of this discrimination women do not get recognition for their rights from birth to death. Article also conveys about the pride of women.

**Keywords:** Women, Feminism, Discrimination, Equality

## முன்னுரை

ஒரு பெண் என்பவள் இச்சமூகத்தில் மூன்று நிலைகளில் செயல்படுகின்றாள். உடலாக இருப்பது ஆண் எனில் அதை இயக்கும் உயிராக இருப்பவள் பெண். இருவரும் ஒருவரையொருவர் சார்ந்து அன்போடு வாழும்போதுதான் அது குடும்பமாக, சமுதாயமாக வளர்கிறது. வாழ்வில் அடித்தளமாகப் பெண், இருந்து சமுதாயத்தை உருவாக்குகிறாள். ஒரு தாய் தந்தைக்குக் குழந்தையாக, ஒரு ஆடவறுக்கு மனையாகி, குழந்தைகளுக்குத் தாயாக, என்று மூன்று நிலைப் பரிமாணங்களில் செயலாற்றுகின்றாள். அப்படிப்பட்ட பெண் இன்று வரதட்சணை, மணமாகாத நிலை, அடிமைத்தனம், பெண் சிசுக்கொலை, பணிச்சுமை, குழந்தைகளை பராமரிக்க இயலாத சூழல் எனப் பலமுனைத் தாக்குதல்களில் சிக்கித் தவிக்கிறாள்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட இந்த ஏற்றத்தாழ்வு பெண்டிரை அடிமைப்படுத்தி அவர்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை இட்டது. சமூகத்தின் சரிபாதியாக விளங்கும் பெண்கள் தங்களின் முன்னேற்றம் குறித்துச் சிந்திக்கவும் செயல்படவும் தொடங்கியபின் பெண்ணியம் முகிழ்த்தது.

“இன்று பெண்ணியம் என்பதற்குப் பாலியல் சமத்துவம் (Sexual Equalities) என்ற பொருளை தந்தாலும், அஃது பெண்ணின் எல்லா சிக்கல்களையும் புரிந்து கொண்டு அதை நீக்க முயல்வதாகும். பெண்ணிய, ஆண்கள் எந்த அளவு குடும்ப அமைப்பிலும், சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும், அரசியலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகின்றார்களோ அந்த அளவுக்குப் பெண்களுக்கும்

மேற்கூறியவற்றில் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று போராடும் போக்கினை கொண்டது" (Prema, 2001).

## பெண்ணியம் அறிமுகம்

மேலை நாடுகளில் தோன்றிய பெண்ணிய இயக்கம் பெண்களின் உரிமைக்காகப் போராடும் இயக்கமாக விளங்கிற்று. தொடக்கக் காலத்தில் பெண்கள் தங்கள் உரிமை என்னவென்று அறியாமல் இருந்த சூழலில் பெண்களின் உரிமைகளை எடுத்துக் கூறும் இயக்கமாகத் திகழ்ந்தது. பின்பு சமூகத்தின் சரிபாதியான பெண்களின் இருத்தலைப் பெரும் துறையாகவும், கோட்பாடாகவும் விளங்கிய இப்பெண்ணியச் சிந்தனை இன்று பல்வேறு துறைகளோடும் இணைந்து செயல்பட்டு வருகின்றது.

பெண்ணின் உணர்வுகளை, துன்பங்களை, இடிபாடுகளை அவள் நிலையில் நின்று உணர்வதே பெண்ணியம். அப்படியானால் அதில் அவள் மட்டுமா இருக்கிறாள் - இல்லை அவள் சார்ந்திருக்கும் சமுதாயமே உள்ளடக்கி இருக்கிறது.

பிரபஞ்சன், பெண்ணின் வரலாறு என்பது சமூகத்தின் வரலாறு என்றும், சமூகம் பெண்ணை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறுகிறார். இதே கருத்தைப் பெண்களின் உரிமை அறிவிப்பு (Declaration of the Rights of Women) தீர்மானமும் குறிப்பிடுகிறது. ஆண், பெண் இருவருக்கும் நற்குணம், சமஉரிமை, கடமை, தண்டனை இவற்றில் சமமான பங்களிப்பு இருக்க வேண்டும், எனக் கூறுகிறது. உலகக் கலைக்களஞ்சியம், ஆணுக்கு இணையாகப் பெண் பொருளாதாரம், அரசியல், சமத்துவம் இவற்றினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே பெண்ணியம் எனக் கூறுகிறது. ஒரு பெண் பிறப்பு முதல் இறப்பு வரை இயல்பாக வாழ முடியவில்லை. அதை மாற்றிப் பெண் இயல்பாக வாழ வழிசெய்ய முயலுவதே பெண்ணியம்.

## பெண்ணின் பெருமை

பெண் சுதந்திரத்தையும் பெண் விடுதலையையும், பெண் கல்வியையும் பற்றி முதலில் சிந்தித்து கவிதைகள் இயற்றிய பெருமை பாரதியாரையேச் சாரும். பெண்ணின் சிறப்பினைப் பற்றி குறிப்பிடும்போது,

"ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்"

"பூணும் நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்

போந்து நிற்பது தாய்சிவசக்தியாம்

ஞானம் நல்லறம், வீர சுதந்திரம்

பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"

எனப் போற்றிப் பாடினார். மனித இனத்தில் பேறு பெற்றது பெண் இனம் (Subramanya Bharathiar, 2013).

அதனால்தான்

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'

என்று பெண்மையைப் போற்றுகிறார் கவிமணி. பெண் பேணப்படவேண்டியவள். கண்ணின் கருமணியாகக் காக்கப்பட வேண்டியவள் என்பதை குடும்பவிளக்கில் பாவேந்தர் பாரதிதாசன் கூறுகிறார்.

"பெண்ணே பிறந்தவிட்டால், மண்ணில்விட்டால் மாசுபடுமென்று என் கண்ணில் வைத்துக் காப்பேன்" 'பெண்ணின் பெருந்தக்கயாவுள' என பெண்மைக்குப் பெருமை சேர்த்தவர் வள்ளுவர் (Subramanya Bharathiar, 2013). இத்தனைச் சிறப்புடைய பெண்மைக்கு இடைப்பட்ட காலத்தில் ஆண்களால் வஞ்சனை ஏற்பட்டது. இனத்தால் மாறுபட்ட ஆண் - பெண் இவர்களுக்கிடையே பிறப்பில் பாகுபாடு,

கல்வியில் பாடுபாடு, பொருளாதாரத்தில் பாகுபாடு, திருமணத்தில் பாகுபாடு, இறப்பில் பாகுபாடு என பிறப்பு முதல் இறப்புவரை பாகுபடுத்திப் பார்த்தது தமிழ்ச் சமுதாயம்.

## பிறப்பில் பாடுபாடு

பெண் விடுதலைப் பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கும் காலத்தில் பெண் குழந்தை என்றவுடன் கல்லறை தயாராக்கிவிடுகிறோம். என்ன குழந்தை என்று அறியும் முன்பே காத்திருக்கிறோம் கள்ளிப்பாலோடு. பெண் குழந்தை என்று அறிந்துவிட்டால் (Scanning) கருவறையிலேயே கல்லறை.

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் பெண் கருக்கொலை, பெண்சிசுக்கொலை, பல்கிப் பெருகி இருந்தது. இவை மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியிலும், தருமபுரி மாவட்டம் மற்றும் சில மாவட்டங்களில் பரவலாகவும் நடைபெற்றன. எனவே பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக 1992-ல் அப்போதைய முதலைமச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் மூலம் அரசு தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலம் பெண்கருக்கொலையும், பெண்சிசுக்கொலையும் கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றது.

பெண் சிசுக் கொலைக்கு முக்கிய காரணம் பெண் குழந்தை பிறந்தால் செலவு என்றும், ஆண் குழந்தை பிறந்தால் வரவு என்றும் கிராமப்புரங்களில் மக்கள் கூறுகின்றனர். ஆனால் தொடக்ககாலத்தில் பெண்வழிச் சமுதாயமே இருந்த்து. இடைப்பட்ட காலத்தில் சொத்துரிமை பெண்களிடம் இருந்த தட்டிப் பறிக்கப்பட்டது.

"சொத்து ஆண்பிள்ளைகளுக்கு முழுமையாக போய்ச் சேர வேண்டும் என்று விரும்புகின்றனர். பெண்களுக்கு சொத்து கொடுத்தால் அது இன்னொரு வீட்டிற்குப் போய்விடும் என்று நினைக்கின்றனர்" (Prema, 2001).

ஆணையும், பெண்ணையும் சமமாகக் கருத வேண்டும் என்பதை "ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கிவ் வையம் தழைக்குமாம்" என மகாகவி பாரதியார் வலியுறுத்துகிறார் (Subramanya Bharathiar, 2013). தற்போது பெண்கள் காலடி எடுத்து வைக்கும் துறையெல்லாம் சிறந்து விளங்குகிறது. எனவே பெண்ணை இழிவாக எண்ணும் போக்கு குறைந்திருக்கிறது எனக் கூறலாம்.

## கல்வியில் பாகுபாடு

பெண்களுக்கு கல்வியும் எட்டாக்கனியாகவே இருக்கிறது.

"அடுக்களைக்கு ஒரு பெண்ணும்

அம்பலத்திற்கு ஒரு ஆணும்"

என்ற பழமொழிகள் சட்டம் உருவாகின (Prema, 2001). ஆனல் இப்பொழுது அடுப்பூதும் பெண்களுக்குக் கல்வி எதற்கு என்ற எண்ணம் மேலோங்கிய காலம் மாறி, பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம், என்று புதுமைப்பெண்கள் வீரநடை போட்டு வெற்றிபடைத்துக் கொண்டிருக்கின்றனர் (Subramanya Bharathiar, 2013).

ஓர் ஆண்கல்வி கற்றால் அந்தக் கல்வி ஆணை மட்டுமே சாரும். ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் அக்குடும்பமே பயனடையும். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம், குடும்பத்தை மேன்மைப்படுத்த கண்டிப்பாகப் பெண்ணிற்குக் கல்வியறிவு தேவை எனவே ஆணுக்கு இணையாகப் பெண்களும் கல்வியறிவில் சிறந்து விளங்கும் தற்காலத்தில் கல்வியில் ஆண்களை விட பெண்களே தேர்ச்சி விகிதத்தில் அதிகமாக உள்ளனர்.

இக்காலகட்டத்தில் பெண்கள் சிந்தனையிலும், ஆற்றலிலும் மாறி வருகின்றனர், ஆண்களின் தவறுகளை பெண்கள் ஏற்று கொள்வதில்லை, என்பதை தாமரையின் புதுகவிதை வரிக உணர்த்துகின்றது.

"ஆனால்

உன் கோழைத்தன்மையை என்

கால்கள் பொறுத்துக்கொள்வதேயில்லை

மிதித்து அழிக்கவே விரும்புகின்றனர்"

நாட்டை ஆண்ட இராணி மங்கம்மாள், விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், ஒப்பற்ற கவிஞராக விளங்கிய சரோஜினி நாயுடு, இந்தியாவை உயர்த்திய இந்திராகந்தி, அறப்பணி செய்து வந்த அன்னை தெரசா, விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ், இத்தனை உயர்வு பெற்ற நிலையில் பெண்கள் தன்னை மாற்றிக்கொண்டனர். மாற்றிக் கொண்டாலும் கூட படித்த பெண்ணையும் இன்று கொடுமை படுத்துகிறார்கள் (Thamarai, 2002).

படித்து வேலைக்குச் செல்லும் பெண் தன் உழைப்பினால் எந்த பலனும் பெறுவதில்லை மாறாக துன்பப்படுகிறாள். அவளின் உழைப்பு மட்டுமே கணவனுக்குத் தேவைப்படுகிறது. இருட்டியபின் வீடு திரும்பினாலும், அலங்காரம் செய்யும் போதும், அலுவலகம் விட்டுக்களைத்து, கலைந்த கூந்தலோடு வரும்போதும் சந்தேகத்தால் சொல்லும் வார்த்தைகள், ஆனால் சம்பளத் தேதியன்று மட்டும் மௌனமாக இருக்கும் கேவலமான புத்தி கொண்ட கணவன்களால் கல்வி கற்ற பெண்களே கை பாவையாக துன்பப்டுகிறார்கள்.

"கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்மந்தப்பட்டதில்ல, ஆண்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது மொழிகளில் தனி வார்த்தைகளே காணாமல் மாற்றப்பட்டுக் கிடப்பதற்கு காரணம் ஆண்களின் ஆதிக்கமே" (Ramasamy, 1942).

படிக்காத பெண்கள் நிலைமையை சொல்லவே தேவை இல்லை, மேலும் பணிபுரியும் பெண்களுக்குச் சுமை கூடிவிடுவதால் மனம், உடல், இரண்டும் பாதிக்கப்படுகின்றன. நான்கு மணிக்கு எழுந்து பாத்திரம் தேத்து, துணி துவைத்து, பால் வாங்க ஓடி, குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பி, அவளும் அலுவலகம் நோக்கி, மாலை வந்தபிறகும் ஓய்வற்ற நிலை, அசதியில் கண்ணசந்து விட்டால் மாமியாரின் குத்தல் மொழி, இத்தகைய ஓய்வற்ற அவசர வாழ்க்கையுள் கல்வி பெற்ற பெண்களின் வாழ்வு செல்கிறது.

"இந்த நூற்றாண்டில் பெண்கள் ஆண்களை விடக் கல்வியில் மேம்பட்டவர்களாகத் திகழ்கின்றனர். கற்கின்ற பெண்களின் விழுக்காடு அதிகமாகிவிட்டது. பெண்கள் இன்று மருத்துவராய், பொறியாளராய், வழக்கறிஞராய், கணக்காளராய், அறிவியல் அறிஞராய் திகழ்வதைக் காண்கிறோம்."

## திருமண வாழ்வில் பாகுபாடு

பெண்கள் என்னதான் முன்னேறினாலும் அவர்களைச் சுற்றி வளைத்திருக்கும் வேலி வரதட்சணை, பெண் பார்க்க வந்து நூறு பவுன், பணம், ஸ்கூட்டர், டி.வி எனப் பட்டியலிட்டு பெண்ணின் திருமணத்தை எளிதாக நடத்தவிடாமல் முதிர்கன்னியாக துன்பப்படும் நிலைமைக்கு தள்ளி விடுகின்றனர், பின்னர் அவள் வரதட்சனையால் முதிர் கன்னியாக புலம்புகிறாள் என வைரமுத்து தன் புதுக்கவிதையில் பதிவு செய்கிறார்.

"ஷாஜகானும் வேண்டாம்

ராமனும் வேண்டாம்

ராவணா நீயாவது வா

புஷ்பக விமானமா கேட்டேன் உன்னிடத்தில்

கள்ளத்தோணியிலாவது"

சங்க காலத்தில் பெண்களுக்கு தட்சணை கொடுத்து ஆண்கள் திருமணம் செய்து கொண்டனர் (Vairamuthu, 2016). அது மட்டுமல்லாமல் திருமணம் ஆனவன் என்பதற்கு காலில் மிஞ்சி அணிந்திருந்தனர். தற்போதைய காலக்கட்டத்தில் "ஆண்கள் எதுவும் அணிவதில்லை, ஆனால் பெண்கள் மணமாலை என்பதற்குக் கழுத்தில் தாலியும், காலில் மெட்டியும் அடையாளங்களாக உள்ளன. ஆண்களுக்கென ஏதாவது அடையாளம் உள்ளதா? இல்லையே. மேலும் திருமணத்திற்கு பின் பெண்களை குடித்து வந்து அடித்து துன்புறுத்துகின்ற ஆண்களும் அதிகம்.

"கணவன் உண்டபின் எச்சிலை அருந்துதல், மாற்றாளுக்கு எல்லா நகைகளையும் கொடு எனக் கணவன் ஆனையிட்டால் சிறிதும் மனம் கோனாது கொடுத்தல், கணவன் கடிந்து பேசினாலும் எதிர்த்து பேசாதிருத்தல், கணவன் துணை இல்லாத புண்ணிய நீராடவோ, நோன்பு மேற்கொள்ளவோ இயலாத நிலை இதுவே பெண்கள் நிலை" (Prema, 2001).

## இறப்பில் பாகுபாடு

கணவன் இறந்தால் மனைவி விதவை. மனைவி இறந்தால் கணவனுக்கு என்ன பெயர்? எதுவும் இல்லையே. மனைவி இறந்தால் உடனே மறுமணத்திற்குத் தயாராகி விடுகின்றானே புதுமாப்பிள்ளையாக. ஆனால் கணவன் இறந்தால் இளம்பெண் ஆனாலும் அவள் இருட்டு உலகில் அடைப்பட்டே சாகவேண்டும். எந்த மங்கலகரமான நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள முடியாது. ஆனால் பெண்களுக்கு மறுமணம் தேவை என்பதை

"கோரிக்கையற்று கிடக்குதண்ணே

இங்கு வேரில் பழுத்த பலா"

என்ற கவிதையில் கோடிட்டுக்காட்டினார் (Bharathidasan, 2000). ஆனால் இளம் விதவை ஆனாலும் பூ, பொட்டு வைக்ககூடாது. கையில் வளையல் அணியக்கூடாது என்ற கட்டுப்பாடுகளோடு வெள்ளைப் புடவை அணிய வேண்டும் என்ற அடக்கு முறைகளும் விதிக்கப்படுகின்றன. பூ, பொட்டு, வளையல், இளமைக் காலம் முதல் பெண் அணிந்திருப்பவை. தாலியும், மெட்டியும் மட்டும்தான் திருமணத்தில் அணியப்படுபவை. இவை இரண்டையும் துறப்பது முறை. மற்றவை எல்லாம் இழக்க வேண்டும் என்பது எந்த விதத்தில் நியாயம்? இவற்றையெல்லாம் பேசுவதற்கு என்று பெண் வாய் திறக்கின்றாளோ அப்போதுதான் உண்மையில் பெண்கள் விடுதலை பெற்றவளாவாள். மேலும், பெற்றோர் இறப்பின் போது ஆண்மகன்தான் கொள்ளி வைக்கவேண்டும் என்பது கட்டுபாடு. ஆண்குழந்தை இல்லாத பெண்குழந்தை மட்டுமே உள்ள பெற்றோருக்கு மகள்களும் கொள்ளி வைக்கலாம் என்பது சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும். கொள்ளி வைக்கப் பிள்ளை இல்லையே என்பதில் பிள்ளை என்பது ஆண்பிள்ளையைக் குறிப்பதாகும். எனவே பிள்ளை என்பது இருபாற்பிள்ளையைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

## முடிவுரை

ஆணாதிக்கம் அன்று முதல் இன்று வரை தொடரத்தான் செய்கிறது. பாதிக்கப்பட்ட பெண்ணின் சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றாலும் வெளிச்சத்திற்கு வரும் எண்ணிக்கை மிக குறைவாகி உள்ளது. பெண்ணுரிமையினைக் கையில் எடுத்து போராடக் கூடிய அளவில் ஒரு சில படைப்பாளர்களே பெண்ணிய கருத்துக்களை கூறுகின்றனர். இந்தியா விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆன பின்னும் முதல் இந்தியக் குடிமகளாவதற்கு எத்தனை, எத்தனை எதிர்ப்புகள். எதையும் போராடித்தான் பெண்கள் பெறவேண்டும் என்ற நிலை இருக்குமானால் அதில்தான் உண்மையான மகிழ்ச்சி உள்ளதானால்

தொடர்ந்து போராடுவோம். ஆணில்பாதி பெண் என்ற நிலை மாறி, பெண்ணில் பாதி ஆண் என்ற நிலையை உருவாக்க சபதமேற்போம்.

## References


Bharathidasan, (2000) Kudumba Vilakku, Annai Puthagaalayam, Chennai, India.

Prema, (2001) Penn Marabiyalum, Ilakkiyathiyalum, Tamil Puthagaalayam, Chennai, India.

Ramasamy, E.V. (1942) Penn Enn Adaimaiyanal Veeliyeedu, Erode, Chennai, India.

Subramanya Bharathiar, (2013) Bharathiyar Kavithaikal, Annam Puthagaalayam, Chennai, India.

Thamarai, (2002) Oru Kadhavum, Konjam Kallipalum, Kumaran Pathippagam, Chennai, India.

Vairamuthu, (2016) Entha Pookal Virpanaikalla, Surya Ilakkiyam Velliyeedu, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License